www.tamilarangam.net

Raya

# பெண்கள் சந்திப்பு மலர்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE



1991

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

வெளியீடு : 1

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே


* அறிமுகம்
* பெண்களும் சந்திப்பும்
* வேலைக்காரி
* போர்ச்சூழலும் பெண்களும்
* கசப்பான பலாக்கனி
* இடப்பெயர்வுகளோடு தொடர்புடைய பெண்விடுதலையின் சாதகமான தேடல்கள்
* அவளில்லா அர்த்தங்கள்
* சினிமா மற்றும் கலை,கலாசார அம்சங்களில் பெண்கள்
* பெண்நிலைவாதம் பற்றி...
* தீயிடை மரங்கள்
* பழகிப் போனது



**பெண்கள் சந்திப்பு மலர். 1991**

விலை 5 DM

வெளியீடு:
பெண்கள் சந்திப்புக்குழு



சகல தொடர்புகளுக்கும்:

PENNKAL CHANTHIPPU

FRAUN TREFFEN
INFORMATION ZENTRUM DRITTE WELT
OVERWEGSTR. 31,
4690 HERNE 1
GERMANY


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எங்களிடமிருந்து.......

வணக்கம். சொந்தநாட்டைப் பிரிந்து தூரத்தேசங்களுக்குச் சென்று அகதிகளாக வாழ்பவர்களில் பெண்களும் அடங்குவர்.

அந்நாட்டு அரசாங்கங்களால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் சட்டங்களாலும், எமது தாய்நாட்டின் துயரநிலை காரணமாகவும் ஏற்படும் விரக்தியுடன் கூடிய, நான்கு சுவர்களுக்குள் தனித்து, சமையல், குழந்தைகள், வீடியோ படங்களென நாட்கள் தொடரவே அதிகமான பெண்கள் தம் வாழ்நாட்களைக் கழிக்கின்றனர்.

"எம்மால் ஒன்றும் செய்யமுடியாது" என ஒரு மூலைக்குள் முடங்கியிருக்கும்வரை, நிச்சயமாக எம்மால் ஒன்றும் செய்யமுடியாதுதான்.

எதாவது செய்தாக வேண்டும் என்பதற்கு முதற்படியாக, ஜேர்மனியில் ஒவ்வொரு நகரமெனச் சிதறி வாழும் பெண்கள் சந்தித்து தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்காகவே பெண்கள் சந்திப்பு உருப்பெற்றது.

இச்சந்திப்பு ஹேர்ண நகரில் 1990 மார்ச்மாதம் ஆரம்பிக்கப்பட்டு, மூன்றுமாத இடைவெளிகளில் முறையே ஹேர்ண, வூப்பெற்றால், ஸ்ருட்காட் ஆகிய நகரங்களில் நடைபெற்றதுடன், தற்போது நொயில் நகரில் நடைபெறவுள்ளது.

எம்மனங்களிலுள்ள கருத்துக்களையும், எண்ணங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுமிடத்துதான் அவை முழுமை பெறுகின்றன. பலதரப்பட்ட கருத்துக்களை ஒருங்கமைக்கும் மையமாக பெண்கள் சந்திப்பு விளங்குவதன் மூலமே அதற்குரிய நோக்கத்திற்கான அர்த்தத்தைப் பெறமுடியும்.

ஒருவருட காலமாக நாம் சந்தித்து கலந்துரையாடியதன் விளைவாக, அடுத்தபடியாக ஒரு வருடத்திற்கொருமுறை ஒரு 'மலர்' வெளியிடுவதன் மூலம், நமது கருத்துக்களை எழுத்துருபத்தில் வெளிக்கொணரலாம் என்ற அனைவரது விருப்பத்திற்கேற்பவே இம்மர் வெளிவருகின்றது.

இம்மலர் மூலம் நமது செயற்பாடுகளைத் தனித்து ஜேர்மனிக்குள் குறுக்காது, மற்றைய நாடுகளிலுமுள்ள பெண்களைச் சந்திக்கும் வாய்ப்பும், அவர்களது கருத்துக்களையும் அறியும் சந்தர்ப்பமாகவும் இது அமையலாம்.

இது ஒரு சிறு நகர்வு மாத்திரமே. உங்கள் தொடர்ச்சியான பங்களிப்பினாலும், விமர்சனங்களினாலுமே நமது செயற்பாடுகளைக் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்லமுடியுமென நாம் நம்புகின்றோம்.

பெண்கள் சந்திப்புக்குழு

(11.05.1991)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களும் சந்திப்பும்

சந்திப்புக்கள் பலவகை. அவை சந்திப்பாளர்களின் தேவை, நோக்கம், மார்க்கம் நடைமுறை எதிர்பார்ப்பு என்பவைகளின் அடிப்படையில் வேறுபடுகின்றன. பிரச்சனைகளைத் தீர்ப்பபதற்காகவும் சந்திக்கின்றார்கள். பிரச்சனைகளைச் சந்திப்பதற்காகவும் சந்திக்கின்றார்கள். இது சந்திப்பாளரின் ஆற்றலையும் செயல்திறனையும் பொறுத்த விடயம். எது எப்படி இருப்பினும் நான், எனது என்றில்லாது நாங்கள் எங்களுடைய என்ற உணர்வுகளுக்கும் வளர்ச்சிக்கும் எதிர்காலத்தில் ஆக்க சக்திகளாய் வடிவம் பெறும் அமைப்புகளுக்கும் இச்சந்திப்புக்கள் கூட காரணமாபமையக் கூடும்.

இருவர் சந்திப்பதும் சந்திப்பு. பலர் கூடுவதும் சந்திப்பு. எதிரும் புதிருமாய் இருந்த இருவல்லசுகளின் தலைவர்களின் சந்திப்பு இன்று உலகின் போக்கையே மாற்றியமைத்திருக்கின்றது. இதே போன்று புலம்பெயர்ந்த தமிழர்களுக்கிடையில் ஜேர்மனியில் நடைபெறும் இலக்கியச் சந்திப்புக்கள், பெண்கள் சந்திப்புக்கள் என்பனவும் அடங்கும். முக்கியமாகப் பெண்கள் சந்திப்பைப் பற்றிக் கூறினால் எங்கள் சமூக அமைப்பின் மூடுதிரைகளை வீதிக்கு கொண்டுவந்து அந்த சாக்கடையிலிருந்து பெண்களை விடுவிக்கும் பணியை இச்சந்திப்பு பூரணப்படுத்துமா என்பது கேள்விக்குறியே. சமய, சம்பிரதாய பண்பாட்டுப் பாரம்பரிய ஒடுக்குமுறை அடுக்குகளை கலாச்சாரம் என்ற போர்வையாக்கி குளிர்காயும் பெண்களுக்கு இச்சந்திப்பு ஒரு சவாலாக அமையலாம். ஆனால் இந்தத் தேவை தவிர்க்கப்பட முடியாதென்பதை இச்சந்திப்பில் கலந்து கொள்ளும் பெண்களைக் கவர்ந்து கொள்ளும் கருத்தியலின் தாக்கல்களையே காண்பிக்க வேண்டும். அப்படியான கருத்துருவத்தாக்கம் இச்சந்திப்பளர்களிடம் உரம் பெறவேண்டுமானால் அவர்கள் ஐரோப்பிய சமூக வளர்ச்சியைப் பற்றியும் எமது சமூகப் பின்னடைவுகள் முரண்பாடுகள் பற்றிய வரலாறு ரீதியான அறிவையும் பெறவேண்டும். இவைகள் வாசனை மூலமும் போதனை மூலமும் பெறப்படலாம்.

சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கத்தை முறியடித்து பெண்கள் சகல துறையிலும் ஆணின் அதிகார வரம்பை அடக்கிவைக்க முற்படும்போது அங்கேயும் பெண்ணாதிக்கம் தலைதூக்க இடமேற்படுகிறது. உண்மையிலேயே இது ஆட்சியதிகாரக் கும்பல்களின் சமத்துவம் அற்ற தான்தோன்றித்தனமான சிந்தனைகளால் உருவான வழக்கு. இதை சமநீதியான மனிதகுல வழக்கை நிலைநாட்டுவதன் மூலம்தான் முறியடிக்கமுடியும். ஆண் பெண் என்ற சொற்பிரயோகங்கள் உயிரினத்தில் இன உற்பத்தியைக் குறிக்கும் அடிப்படையிலேயே வலுப்பெற்றுள்ளன. ஆனால் தமிழில் இது ஆண்சாதி பெண்சாதி என சமூகத்தில் நிலவும் சாதியைக் குறிக்கும் தாழ்வான பிரயோகமாகவே வழக்கிலிருக்கிறது. குறைந்த சாதி, கூடியசாதி என்பது போலவே ஆண் பெண் உயர்வு தாழ்வையும் சமூக நீதிகள் இலக்கியங்கள் கோவை செய்து வைத்துள்ளன. ஆகவே ஓர் ஆதிக்கம் அழிக்கப்பட்டு இன்னோர் ஆதிக்கம் உருவாக்கப்படாமல் பொதுவான உண்மை விளங்கப்படகூடிய; மறைக்கப்பட்டுள்ள உண்மைகளை வெளிக்கொண்டுவருகின்ற சிந்தனைப் போக்கே சந்திப்பாளர்களின் நோக்கமாக இருக்கவேண்டும். அந்த நோக்கம் விரிவுபட இச்சிந்தனைத் தாக்கம் சந்து பொந்து என்றில்லாமல் சமூகத்தில் எல்லா தரப்பையும் சென்றடையச் செய்யவேண்டும்.

**ஈஸ்வரி**

மேற்சொன்ன விடயங்கள் வெகுஜனம் பரப்பைச் சென்றடைய பல மார்க்கங்கள் உண்டு. எழுத்து, பேச்சு, கட்சி என்ற எல்லா விதமான பொதுசனத் தொடர்புச் சாதனைகளையும் பயன்படுத்த வேண்டும். இவைகளை இச்சந்திப்பாளர்களே ஆரம்பித்து நடாத்துவதுதான் சிறப்பானது. ஆனால் அவ்வாறு நடைமுறைப்படுத்த இயலாத நிலையில் மேற்கூறிய கருத்துக்களை ஒளிவு மறைவின்றி ஆதரிக்கும் ஆதரவு சக்திகளின் ஊடாக எழுத்துலகில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவைக்காகக் குரல் கொடுக்கும் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கல்விமான்கள், நாடகவியலாளர்கள், கவிஞர்கள் ஊடாக இவைகளை வெளிக்கொணரும் வாய்ப்புகளுக் வடிகால்கள் அமைக்கலாம். இச்சாதனங்கள் சந்திப்பாளர்களின் முழுநோக்கங்களையும் முற்றுமுழுதாக கொண்டுவர உதவாவிட்டாலும் பசியோடு இருப்பவருக்கு ஒரு சிறிது பழங்கஞ்சி கிடைத்ததைப் போன்றாவது உதவலாம்.

இந்த வாய்ப்புக்கள் மூலம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை அறியும் வாய்ப்பையும் அப்பிரச்சனைகள் உருவெடுக்கும் ஊற்று முகங்களையும் இனங்காணமுடியும். எது எப்படி இருப்பினும் இச்சந்திப்பாளர்களுக்கு எதிரான ஆண்களின் எதிர்ப்பைவிட பெண்களின் எதிர்ப்பே அவர்களை நலிவடையச் செய்யும். காரணம் இப்பெண்களின் மூலமாகவே இதற்கெதிரான சக்திகள் தங்கள் செயற்பாட்டின் முழுத்தாக்கத்தையும் வெளிக்கொண்டுவர முயல்வார்கள்.

இதனால் அவர்களுக்குள்ளேயே இரு அணிகள் அவர்கள் ஒடுக்கப்படுவதை மறுத்தும் ஒடுக்கப்படுவதற்கு எதிராகவும் போர்கோலம் கொள்ளும் நிலை உருவாகலாம். அல்லது மன உறுதிகுலைந்து ஒருஓமப்பாடு இல்லாது சந்திப்பாளர்கள் தனித்தனியாகவே சிதறநேரலாம். அல்லது பொருளாதார அரசியல் காரணிகளால் செயலிழக்கலாம். இவ்வாறான நிலையில் அமைப்பு பற்றிய சிந்தனை தோற்றம் பெறலாம். இந்த அமைப்பு வடிவம் எலீலோரையும் ஒன்றினைக்கும் ஒருபடை ஆணியின் வலிமை கொண்டது. அவ்வாறு ஒன்றினைக்கப்பட்ட அணியான அமைப்புகளுக்கு ஆதரவான வேறு அமைப்புகள் உதவ வாய்ப்புக்கள் உண்டு.

இவர்கள் காலக்கிரகத்தில் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சனைகளே இவர்களுக்கு சிந்தனை கருத்தியல், செயல்பாட்டு நடைமுறை ரீதியான அனுபவங்களைக் கொடுக்கும். ஒடுக்குமுறைகளின் அடுக்குகளில் கொடுமைகளின் மத்தியிலே வாழும் ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்துதான் அந்த ஒடுக்குமுறை அடுக்குகளை தகர்த்தெறிவதற்கான போராட்ட உணர்வுகள் முகிழ்வடையும். அந்த போராட்ட உணர்வினால் ஈர்க்கப்பட்ட ஒடுக்கப்படும் மக்களே போராட்டத்தை முன்னின்று நடத்தும் சக்தியாகவும் அமைதல்வேண்டும். இச்சந்திப்பாளர்களுக்கு உண்மையாக பெண்ணடிமைத்தனத்திலிருந்து பெண்கள் விடுவிக்கப்பட வேண்டும் ானற ஆர்வம் இருப்பின் மேற் சொன்ன முறைகளின் அடிப்படையில் முதலில் தங்களை ஆணியாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற்காக ஒற்றுமையுடன் உழைப்பார்களானால் ஆண் பெண் என்ற பேதமற்ற மனிதகுல மாண்பின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவுபவர்களாவர்.

## உணர்வெனும் கனலிடை, அயர்வினை எதிர்ப்போம்....

*பெண்மை தாய்மை, இறைமை என்றே*
*கண்டார் திரு.வி.கல்யாணசுந்தரர்!*
*பெண்மை வாழ்க என்றே போற்றினர்*
*பாரதி மற்றும் பலப்பல கவிஞர்!*
*அந்தப் பெண்மையின் நிலையிந் நாட்டில்.*
*எப்படி உள்ளது? எவ்விதம் உள்ளது?*
*அட்டையில் போடவும், சட்டையில் போடவும்.*
*கட்டாயம் தேவை பெண்களின் படமே!*

*கணவனை இழந்த காரிகை தனக்கு*
*கையும் காலும் இருக்கிற தென்றே*
*எண்ணியும்*
*பாரா எழுத்தாளர்கள்*
*பெண்மையை விற்கிறார் என்றே கதைக்கிறார்*
*அபத்தக் கதைகள், ஆபாச வருணனைகள்!*
*இதனால் பெண்கள் மனங்கவல்கின்றார்;*
*தாய்மை உணர்வெனும் கனலின் நடுவே*
*பெண்மையைத் தூற்றும் அயர்வினை எரிப்போம்!*

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு விழா மலரிலிருந்து ஒரு கவிதையின் பகுதி.(4.1.81 - 10.1.819 மதுரை.

இயற்றியவர் கவிஞர்.அரசு.மணிமேகலை.
தொகுப்பு: விஜிதா.

www.tamilarangam.net

# வேலைக்காரி



எஜமானியின்
கட்டளையில்
என் உடல்....
எஜமானின்
கட்டிலிலும்.

அவன்
பட்டுமேனியைப்(ப்)
பத்திரப்படுத்தலில்.

நிமிடங்கள்
நிறுத்தலின்றி
நித்தமும்
துவையல்.

நானோ
மரத்துப்போன
கரங்களோடு.

நான்—
விபச்சாரி
சலவை இயந்திரம்
மாட்டு வண்டில்
துடைப்பங்கட்டை
பொத்தானை
அழுத்திட
ஆடிவரும் பொம்மை....

என்
இதயத் துடிப்பு
இல்லாமற் போகும்வரை
இறுகப் பிழிந்து
சக்கையாய்
வீசுவர்.

நாளைய
நாட்களில்
மீண்டும்
உயிர்க்கையில்
நான் மனுசியாய் மட்டுமே!!

நா.நிருபா

(ஒரு இலத்தீன்அமெரிக்க கவிதை தந்த பாதிப்பு)

www.tamilarangam.net

# போர்ச்சூழலும் பெண்களும்

*எப்படி ஒரு போரை இட்டுச் செல்வது என்பது பற்றி அறிந்திருந்தோம்; ஆனால் சமாதானம் பற்றி எமக்கு எந்தவித அனுபவமும் கிடையாது.*

**-Xuan Oanh-**

(சுவான் ஒங்க்- வியட்னாம் போர் பற்றி)

போர் மரணத்தையும், ஈடுசெய்ய முடியாத அழிவுகளையுமே விட்டுச் செல்கிறது. எண்ணிலடங்காத கோரக் கொலைகளும், கொடுமைகளும் நாடுகளுக்கிடையே போர் நடைபெற்றாலும், இனங்களுக்கிடையேயான போராகிலும் விளைவுகளாகின்றன. இரண்டாம் உலகமகாயுத்தத்திலிருந்து, கிட்டத்தட்ட 20 கோடி மக்களின் உயிர்களைப் பலிகொண்ட 150 போர்கள் மூன்றாம் உலகநாடுகளில் மட்டும் இடம் பெற்றுள்ளன.

எந்த ஒரு நாடாயினும், எந்த ஒரு காலத்திலும் போர்க்காலங்களின் போது பெண்களின் மீதான பாதிப்பு ஒருபடி அதிகமாகவேயுள்ளது.

பண்டைக் காலங்களில் போரில் ஒரு நாட்டை வென்ற மன்னர்கள் தோற்ற நாட்டைச் சேர்ந்த பெண்களைச் சிறையெடுத்துச் சென்றதைச் சரித்திரம் கூறுகிறது. இச் செயல் அந்நாட்டின் மானத்தை இழக்கச் செய்யும் செயலாகவே கருதப்பட்டது. பெண்களின் மானத்தை அழிப்பது அல்லது பலாத்காரம் செய்வதன் மூலம் அந்நாட்டின் அல்லது இனத்தின் தன்மானத்தையே இழக்கச் செய்வதாக உணரப்பட்டது.

போரின் போது பெண்களைப் பலாத்காரம் செய்வதன் மூலம் அவர்களின் மனவலிமையைக் குன்றச் செய்வதுடன், அச்சமூகத்திற்கே அச்சத்தை ஊட்டலாம் என்பது போர் வெறியாளர்களின் எதிர்பார்ப்பு. எந்த ஒரு போருமே இதைச் சந்திக்காமல் இல்லை.

இலங்கையில் இனக்கலவரங்கள் இடம்பெற்ற காலங்களிலும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் மீது இலங்கை இராணுவத்தினர் நடாத்திய தாக்குதல்களின் போதும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இந்தியப்படையினர் தமிழினத்தின் மீது தொடுத்த போரின் போதும் இளம் பெண்களும், முதிய பெண்களும் வயது வித்தியாசமின்றி பலாத்காரப்படுத்தப்பட்டனர். இதன் பின்னர் தற்கொலை செய்துகொண்ட பெண்களும், சமூகத்தின் கேலிக்கு இலக்காகி நடைப்பிணமாக உலவிய பெண்களும், மனோவியாதியுள்ளவர்களாகி அல்லல்படும் பெண்களுமாக அவர்கள் அனுபவித்த துன்பங்கள் ஏராளமானவை.

இப்படி போர்ச்சூழலில் அகப்பட்டு கொலை, கொள்ளை, தீவைப்பு, மானபங்கப்படுத்தப்படல் போன்ற வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுகின்ற பெண்கள் இசசந்தர்ப்பங்களில் எதிர்பாராத துணிவையும், எழுச்சியையும், சக்தியையும் பெறுதல் இயற்கையே. இதுவரை சமூகத்தில் பெண் என்ற பாத்திரத்தில் தான் பேணி வந்த பாரம்பரியம் பண்பாடுகளை அப்படியே தொடர்ந்து பேணி வாழமுடியாத நெகிழ்வுகளுக்கு உட்படவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

---

**தேவிகா**

---

கடந்த காலங்களில், இலங்கை அரசின் அடக்குமுறை காரணமாக தமது குடும்பத்தின் ஆண் அங்கத்தவர்கள் காணாமல் போனதும், இறந்து போனதும், போராட்டத்தில் ஈடுபட்டதும், அகதிகளாக வெளிநாடுகளுக்கு வெளியேறியதுமான காரணங்களால் பெண்களே எல்லாவற்றிற்கும் பொறுப்பேற்க முன்வரவேண்டிய நிலைமை உருவாகியது. ஆண் அங்கத்தவர்களை அருகிலுள்ள கடைகளுக்குக் கூட அனுப்பமுடியாமல் பாதுகாக்க வேண்டிய நிலையில் கிடுகு வேலிகளுக்கப்பால் எட்டிப்பார்க்கக் கூட அனுமதிக்கப்படாத பெண்கள் வெளிவந்து இதுவரைகாலமும் ஆண்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த பொறுப்புக்களை ஏற்கவேண்டியதாயிற்று.

இன்னும் விடுதலைப்போராட்டத்தில் பெண்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய சூழ்நிலையும் உருவாகிற்று.

( 20ம் பக்கம் பார்க்க )

www.tamilarangam.net

சிறுகதை

# கசப்பான பலாக்கனி



சிங்கள மூலம்: மல்லிகா

இரவாகிக் கொண்டிருந்ததனால் இருட்டும் குளிரும் அதிகரித்துக் கொண்டிருந்தன. மழை பெய்து ஓய்ந்திருந்தாலும் பலாமரத்து இலைகளிலிருந்து வடிந்து வந்த மழை நீரானது வீட்டுத் தகரக்கூரையில் வீழ்ந்து தெறிக்கும் 'டக் டக்' ஒலியும், மேசை மீது வைக்கப்பட்டிருந்த கை விளக்கின் மங்கிய வெளிச்சம் காற்றினால் கூடிக் குறைவதனாலும் அவர்களின் மனங்களிலிருந்த பயவுணர்வும், தனிமையும் வரவர அதிகரித்தன.

மேசையின் ஒரு மூலையில் இருந்து எதையோ எழுதிக்கொண்டிருந்த சியாமளா
"இந்த விளக்கும் நூந்திடப் போகுது.... இனி எழுத ஏலாது.... அக்கா இந்த விளக்குக்குக் கொஞ்ச எண்ணெய் விடுங்கோவன்" என்றவாறு சற்றுத்தள்ளி அமர்ந்திருந்து தைத்துக்கொண்டிருந்த மல்காந்தியைக் கேட்டாள்.
"எண்ணெயில்லைத் தங்கச்சி இனிக்காணும் நிப்பாட்டு.... உதுதான் அம்மா உனக்கு நெடுகச் சொல்லுறவ வீட்டு வேலைகளை வேளைக்கே முடிக்கச் சொல்லி.... நானும் தைச்சு முடிச்சுட்டன்...." என்றவாறு மல்காந்தி எழுந்தாள்.

கைவிளக்கொன்றைக் கையில் பிடித்தவாறு குசினிக் கதவைச் சாத்தியவாறு வீட்டிற்குள் வந்த எமலி "இண்டைக்கெண்டால் விசயம் சரிவாற மாதிரி இல்லை.... நாங்கள் கொஞ்சம் வெறுந்தேத்தண்ணி குடிச்சிட்டுப் படுப்பம்" என்றாள் பெருமூச்சொன்றை விட்டபடி.

"அம்மா இங்க பாருங்கோ சின்னத்தங்கச்சி பசியிலே நித்திரையாய்ப் போயிட்டாள்" மல்காந்தி ஜீவனிக்கருகில் சென்றாள்.
எமலியும் அருகில் சென்று "எழும்பு பிள்ளை எழும்பு .... நான் தேத்தண்ணி வைக்கும் வரைக்கும்" அவள் சொல்லி முடிப்பதற்குள் 'ஜால்'என்ற சத்தம் கேட்டது.
"அங்கே" என்று கலவரப்பட்ட எமலி கைவிளக்கை எடுத்துக்கொண்டு வெளியில் விரைந்தாள்.

ஒரு கையில் விளக்கும், மறுகையில் வெளவால்கள்

www.tamilarangam.net

தின்ற பலாப்பழமொன்றையும் கொண்டு எமிலி வீட்டிற்குள் நுழைந்தாள்.
விளக்கின் எண்ணெய் முற்றாகத் தீர்ந்து போனதால் சியாமளா அடுத்தநாள் பள்ளிகூடத்திற்குத் தேவையான புத்தகங்களை அடுக்கிவிட்டு ஜீவனிக்கருகில் சென்று.
"தங்கச்சி எழும்பு இண்டைக்கு நல்ல ஒரு பலாப்பழம் கிடைச்சிருக்கு எழும்பு.... நல்லவாசம் எழும்பு" என்றாள்.
ஜீவனி திடீரென்று எழுந்து கொண்டாள். அவளுக்குப் பலாப்பழம் என்றால் பிரியமதிகம்.
"பொய்தானே" என்றவாறு மீண்டும் தூங்கலானாள் ஜீவனி.
"இல்லை பெய்யில்லை.... வா காட்டுறன்" என்றவாறு சியாமளா அவளை குசினிக்கு அழைத்துச் சென்றாள்.
"உப்பிடி உதில இரு பிள்ளை....... மூன்று பேரும் வாங்கோ இந்த விளக்கும் நூந்துச்சென்டால்... வீட்டில் ஒரு துளியும் எண்ணெயில்லை" எமலியிடமிருந்து இன்னுமொரு பெருமூச்சு வெளிப்பட்டுப் போனது.
"முதல்ல சின்னத் தங்கச்சிக்குக் குடுப்பம்" என்றவாறு பலாச்சுளையொன்றை ஜீவனிக்குக் கொடுத்தாள். அதை அவசரமாகத் தின்று முடித்த அவள் பசியும் பலாப்பழத்தின் மீதான ஆவலும் மேலிட மீண்டும் கையை ஏந்தினாள். அவளுக்கு இன்னுமொரு சுளையைக் கொடுத்துவிட்டு மற்ற இருவருக்கும் கொடுத்தாள்.
" சாப்பாட்டுக்கு வேற சாமான்கள் இருக்கிற நாட்களில மத்தியானத்திற்கு கூட அம்மா பலாப்பழம் தரமாட்டா வயித்துக்குக் கூடாதெண்டு சொல்லி"
சியமளா இப்படிச் சொன்னது சிறிது நேரமாக அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தபடி.
மல்காந்தி அம்மாவைப் பார்த்தாள்.
"ஆ,,,, ஏன் அம்மா அழுகிறா?....."
தனது மூன்று குழந்தைகளின் வயிற்றுப்பசி மரத்திலிருந்து விழுந்த பலாப்பழத்தினால் அப்போதைக்குத் தீர்ந்து போனதில் அவளுக்குச் சற்று ஆறுதலாகவிருந்தாலும், துயர்நிறைந்த தனது கடந்த காலத்தையும் சூனியமாகத் தெரியும் எதிர்காலத்தையும் எண்ணியதால் அவளது சோகம் அதிகரித்து விழிகளிலிருந்து கண்ணீர்த்துளிகள் வெளியே வந்து விழுந்தன.
எமலி எட்டுப்பிள்ளைகள் உள்ள குடும்பத்தின் கடைசிப்பிள்ளை. பாடசாலை ஆசிரியராக இருந்த அவளது மாமாவிற்கு குழந்தைகள் இல்லாததனால் எமிலி அதிககாலம் அவருடனேயே வளர்ந்தாள். அக்காமார் மூவரும் வயதிற்கு வந்த பின்னர் பள்ளிக்கூடத்திலிருந்து நிற்கவேண்டியதாயிற்று.
அந்த இளவயதிலேயே மூவருக்கும் கல்யாணமும் செய்து வைத்ததில் எமலிக்கு அவ்வளவு விருப்பமில்லை.
மாமாவிடம் செல்லமாக வளர்ந்து வந்த எமிலி பள்ளிப்பாடங்களில் சிறந்து விளங்கியதுடன் ஒரு ஆசிரியராக வரவேண்டுமென்ற விருப்பமும் அவளுக்கிருந்தது.
பின்னேரங்களில் கணிதமும் ஆங்கிலமும் படிப்பதற்காக டியூசனுக்கு செல்லவேண்டியிருந்தது. டியூசன் முடித்துவிட்டு வரும்போது, காலி பிரதான பஸ்நிலையத்திற்கு வந்துதான் அவள் வீட்டிற்கு வருவதற்கான பஸ்ஸைப் பிடிக்கவேண்டும்.
அவளுக்கு எட்வின் ஜயரத்னவுடன் பழக்கமேற்பட்டது இந்த பஸ்நிலையத்தில் தான்.
அரச கந்தோர் ஒன்றில் லிகிதராக இருந்த எட்வினுக்கு எமிலி மேல் விருப்பமுண்டாயிற்று.
இருவருக்குமிடையில் சந்திப்புக்கள் தொடர்ந்து, கடிதப்பரிமாற்றங்கள் வரை உறவு வளர்ந்தது. எட்வினின் ஒவ்வொரு கடிதத்திலும் எமிலியைப்பற்றி கவிதைகள் எழுதப்பட்டிருக்கும்.
எமிலியின் கனவான ஆசிரியையாக வேண்டுமென்ற இலட்சியம் கலைந்து போனது. இறுதியில் எட்வினின் மாயவலையில் அவள் சிக்கினாள். தனது இலட்சியத்தை எண்ணிக்கொண்டாலும் எமிலியால் அவனை விடமுடியவில்லை. எட்வின் அவளுக்கு பொய் வாக்குறுதிகள் கொடுத்தான்.
"எனக்கிருக்கிற ஒரே ஆசை நான் ஒரு டீச்சராக வேண்டுமென்டதுதான்....... மாமாவிற்கு இது தெரிஞ்சா நான் இருந்த பாடில்லை.... எங்கட அண்ணனும் சரியான சண்டியன் தெரியுந்தானே....."
இப்பிடியெல்லாம் எமிலி சொன்னபோது
"பயப்பிடவேண்டாம் எமிலி... நானும் ஒரு படிச்சவன். படிப்பின்ற அருமை எனக்குந் தெரியும்...

www.tamilarangam.net

இருந்தாலும் பொம்பிளையள் படிச்சு என்னதான் செய்யிறது.... வேலை செய்யிற பொம்பிளையளை யாரும் மதிக்கிறதில்லை....." என்பான் எட்வின்.

சிலவேளைகளில் அவளது மனம் நொந்து போயிருக்கும் சமயங்களில்

"ஆ உனக்குப் படிக்கிறது விருப்பமெண்டால் நானே படிப்பிக்கிறன்.... கலியாணஞ் செய்த பிறகும் படிக்கலாந்தானே...."

இப்படியான வார்த்தைகளால் எப்படியோ அவளை தன் வசப்படுத்திக் கொண்டான் எட்வின்.

எட்வின் எமலியை விடவும் பல வருடங்கள் மூத்தவனாயினும் அவனுடைய தேகவாகு அவனை இளமையானவனாகவே காட்டியது.

நீண்ட காலமாக இவர்களது உறவு பற்றி எதுவுமே அறிந்திராத எமலியின் பெற்றோருக்கு தாமதமாக இது தெரியவரவே அவள் பலமுறை அவர்களிடம் அடி உதை வாங்கவேண்டியதாயிற்று. எமலியின் பெற்றோரின் உந்துதலினால் அவளை தன் வீட்டிலிருந்து வெளியேற்றும்படி ஆகிற்று மாமாவிற்கு. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட எட்வின் அவளைத் தான் தங்கியிருந்த விடுதிக்கு அழைத்துச் சென்றான்.

எமிலி எட்வினுடன் ஓடிப்போய்விட்டாளென்ற செய்தி ஊரெங்கும் பரவியது.

இதனால் எட்வினும் விடுதியை விட வேண்டியதாயிற்று.

பின்னர் அவர்கள் நகரிலிருந்து சற்றுத்தள்ளியிருந்த ஊரில் வாடகை வீடொன்றில் கணவன் மனைவியாக வாழத்தொடங்கினர்.

சட்டபூர்வமாகத் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு எமிலி அவனை தினமும் வற்புறுத்தினாலும் அவன் அதை பிற்போட்டுக் கொண்டு வந்தான். தனது தலைமைக் கந்தோருக்குப் போவதாகக் கூறி அடிக்கடி கொழும்புக்குப் போய் வந்தான். சிறிது காலத்திற்குப்பின் எமிலி ஒரு குழந்தைக்குத் தாயானாள். எட்வின் கணிசமான தொகையைச் சம்பளமாகப் பெற்றுக் கொண்ட போதிலும் எமிலியிடம் சொற்பத்தையே கொடுத்துவந்தான். நாட்கள் செல்ல வீட்டுக் கஷ்டங்கள் அதிகரித்தன. அவர்களுக்கிடையில் சந்தோசம் குறைந்து உறவில் விரிசல்கள் ஆரம்பித்தன. எட்வின் வீட்டை விடவும் வெளியிலேயே அதிக நாட்களைக் கழித்தான்.

இப்பொழுது எமிலிக்கு மூன்று குழந்தைகள்.

மூன்றாவது குழந்தையான ஜீவனியும் பெண் குழந்தையாகிப் போனதில் எமிலிக்கு பெரியகுறையாகவும் கவலையாகவுமிருந்தது. இறுதியில் இவையெல்லாம் விதி என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

எட்வினிடமிருந்து திடீரென ஒருநாள் வந்த கடிதத்தில் தனக்கு பதவியுயர்வு கிடைத்துவிட்டதென்றும் தான் இப்பொழுது தலமையலுவலகத்தில் வேலை செய்வதாகவும், பிள்ளைகளைக் கவனமாக வளர்க்கும் படியும், தான் வெகுவிரைவில் அங்கு வருவதாகவும் கூறி எழுதியிருந்தான். எனினும் அவன் கடிதத்தில் எழுதியபடி செய்யவில்லை. இடைக்கிடையே வந்து அவர்களைச் சந்தித்துச் சென்றான். ஆடிகொருக்கால் ஆவணிக்கொருக்கால் என்ற கணக்கில் அவளுக்கு காசுக்கட்டளையில் பணம் அனுப்பிவைத்தான். எமிலி தன் கணவன் மீது எப்போதும் அக்கறையாயிருந்தாள். அவன் வந்திருக்கும் சமயங்களில் அவனது தேவைகளை நிறைவேற்றினாள். அவனில் ஏற்பட்ட குணமாற்றங்களும் குடும்பத்தை விட்டு அவன் விலகியிருப்பதும் அவளிற்குக் கவலையை ஏற்படுத்தியிருந்தன.

இதற்கிடையில் பணம் பெறுவதற்காகத் தபால் நிலையம் சென்றிருந்த போது எட்வினுடன் விடுதியில் ஒன்றாக வசித்த சுனில் ஜயசிங்கவைச் சந்தித்தாள். அவனுடன் கதைத்தபொழுது எட்வின் ஏற்கனவே திருமணமானவன், அவன் இரண்டு குழந்தைகளுக்கு தந்தையென்றும் கடைசிக் குழந்தை பிறந்தவுடன் அவனது மனைவி சன்னியினால் பாதிக்கப்பட்டு நடக்கமுடியாமலிருக்கிறாள் என்பதையும் அவன் மூலம் அறிந்து கொண்டாள். அதிர்ச்சியடைந்தாள். அவள் எதிர்பார்த்திராதவைகளைக் கேள்விப்பட்டு புதுமையுற்றாள்.

"ஏன் தம்பி இதை நீர் எனக்கு முன்னமே சொல்லவில்லை" என்று சுனிலிடம் கேட்டதிற்கு அவன் "நான் நினைச்சன் உங்களுக்கு இது

www.tamilarangam.net

தெரியும் என்டு..... மற்றது உதுகளெல்லாம் 'நோமல்'விசயங்கள் தானே" என்று சாதாரணமாகக்கூறிவிட்டான்.
இவ்வளவு பெரிய அநியாயத்தை அவன் 'நோமல்'என்று கூறியது அவளுக்குப் புரியவில்லை. அவள் யோசிக்கலானாள்.

சிலகாலங்கள் கழிந்தன.
எட்வினுக்கு மாரடைப்பு வந்து சுகவீனமுற்றான். அதன்பின்பு அவளையோ பிள்ளைகளையோ பார்ப்பதற்கு அவன் வரவில்லை. பணம் வருவதும் நின்று போனது.
கொழும்பில் வசிக்கும் எமிலியின் நண்பரொருவரின் அவசரக் கடிதத்திலிருந்து எட்வின் இறந்து போன செய்தியை அவள் தெரிந்து கொண்டாள்.
அதன்பிறகு அத்தனை துயர்களையுந் தாங்கிக்கொண்டு எட்வினின் விதவையாக வாழத்தொடங்கினாள்.
எட்வினின் ஓய்வூதியப்பணம் அவன் சட்டப்பூர்வமாகத் திருமணம் செய்து கொண்ட முதல் மனைவிக்கே போய்ச் சேர்ந்தது.
தனது மூன்று குழந்தைகளை வளர்க்க அவள் பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. பிள்ளைகளுக்காக அவள் எல்லாத் துன்பங்களையும் தாங்கிக்கொண்டாள். தனது கவலைகளைப்பற்றியும் தான் படும் அவலங்களைப் பற்றியும் பிள்ளைகளுக்கு எதுவும் கூறாதபோதிலும் இடைக்கிடையே ஆற்றாமையினால் தனது கதையையும் கணவனின் இறப்புப் பற்றியும் அவளது வாயிலிருந்து வெளிப்படுவதுண்டு. மூத்த மகளான மல்காந்திக்கு தாயின் நிலை ஓரளவு புரிந்தது. தாய் மீது இருந்த இரக்கத்தினால் அவள் தன்னாலியன்ற உதவிகளைச் செய்து கொடுத்தாள். தையல் வேலை செய்வதிலும், பலகாரங்கள் சுட்டு விற்பதிலும் அவர்களது குடும்பம் நகர்ந்தது. எனினும் அவை அவர்களுக்கான ஸ்திரமான வருமானத்தை ஈட்டுவதில் உதவவில்லை.

பலாப்பழச் சுளையொன்றை வாயில் வைத்தவாறு எமிலி மீண்டும் அழலானாள்.
தாயின் துயரத்தைத் திசைதிருப்ப முயன்ற சியாமளா "ஏன் அம்மா அழுகிறீங்க... இந்தப் பலாப்பழம் கசக்குதே" என்றாள் நகைச்சுவையாக.
பலாப்பழம் மாத்திரமல்ல அவளுக்கு முழுவாழ்க்கையுமே கசப்பாகத்தான் இருந்தது.
பலாக் கொட்டைகளை எண்ணிக் கொண்டிருந்த ஜீவனி தூங்கிப் போயிருந்தாள். எமிலி அவளைத் தூக்கிச் சென்று பாயில் கிடத்திவிட்டாள்.
சியாமளாவின் பக்கம் திரும்பி "நீங்க ரெண்டு பேரும் வீட்டுவேலை செய்திட்டீங்களா" என்று கேட்டாள். தனது குழந்தைகள் படித்து நல்ல எதிர்காலமொன்று அவர்களுக்கு வரவேண்டுமென்பதே அவளது எதிர்பார்ப்பு.
"ஓமம்மா" என்றாள் சியாமளா. அவளுக்கு நித்திரை வந்துவிட்டது.
கவலைகள் எமிலியை எளிதில் தூங்கவிடவில்லை.
தாய் கவலைப்படுவதைக் கண்ட மல்காந்தி "இப்பிடிக் கவலைப்பட வேணாம் அம்மா நாளைக்குத் திங்கட்கிழமை தானே.. தைச்சிருக்கிற உடுப்புகளைக் குடுத்தா காசு வரும் தானே" என்றாள்.
"ஓம் பிள்ளை அந்தக் கொஞ்சக் காசில என்னத்தைச் செய்யிறது..... நாளைக்குப் பத்தாம் திகதி மூன்று மாச வீட்டுவாடகை கட்டவேணும்.. சைமன் ஐயா முந்தநாளும் வந்து பேசிவிட்டு போனவர். இந்தமாசம் வாடகை தராவிட்டால் வீட்டில இருந்து எழுப்பப் போறதாச் சொன்னவர். ....கூப்பன் சாமான்களும் வாங்கவேணும்.. நாளைக்கெண்டாலும் பிள்ளைகளுக்குக் கொஞ்சம் சோறு காச்சிக் குடுக்கவேணும்... நாள்கணக்காய்... பழையபாணும் பலாப்பழமுமாய்..... ஒரு மாதிரி சாமாளிச்சுட்டம்...."
மூன்று பிள்ளைகளும் தூங்கிப்போனார்கள்.

எமிலி மீண்டும் யோசிக்கலானாள்.
தனது கடந்தகாலங்களைப்பற்றி..... தான் ஏமாந்தது பற்றி எட்வினால் தகப்பனிடமிருந்தும் தமையன்மாரிடமிருந்தும் அடி வங்கியது பற்றி... எல்லாவற்றையும் விட தன் கல்வி பாதியில் நிறுத்தப்பட்டது பற்றி.... தான் வாழ்ந்தது தனது விருப்பங்களுக்காகவல்ல அவனது காமத்திருப்திக்காக மட்டுமே.
அவன் அவளை அலங்காரப் பண்டமாகவும் குழந்தை பெறும் இயந்திரமாகவும் மாத்திரமே பாவித்திருக்கிறான்.

www.tamilarangam.net

அவளுடையதும் மாமாவினதும் ஆசைப்படியே அவள் தொடர்ந்தும் கல்வி கற்றிருந்தால் அவள் யாரிலும் தங்கி நிற்காமல் வாழ்ந்திருக்கமுடியும். இப்பொழுது அவளுக்குக் கொட்டாவி வந்தது. பாயில் அங்குமிங்கும் புரண்டு படுக்கமுயன்றாள்.
நித்திரை வந்தால் கொஞ்ச நேரமாவது அவளது கவலைகளிலிருந்து ஒய்வு பெறமுடியும். எனினும் மேலும் பல கவலைகள் வளர்ந்து கொண்டிருந்தன.

மூன்று பிள்ளைகளும் படித்து நல்ல வேலைகள் செய்து இந்த கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு முடிவுகட்டுவார்களா?
மூன்றும் பெண் குழந்தைகள். என்னதான் படித்தாலும் தனது சட்டபூர்வமற்ற திருமணத்தால்.... நாளை அவர்களது எதிர்காலத்திற்கு பங்கம் நேரிடுமோ.... மல்காந்தியும் இப்ப பெரிய பிள்ளை.... அவளும் ஒரு நாள் என்னைப் போல் பிரச்சனையில மாட்டுப்படுவளா?

எமிலிக்கு இப்பொழுது மெல்லிதாக நித்திரை வந்தது. வீட்டிற்கருகில் இருந்த துணி ஆலைச் சங்கொலியால் மீண்டும் நித்திரை கலைந்தது.
நேரம் காலை ஐந்து மணியாகவிருந்தது. அவள் கொட்டாவி விட்டபடி பாயைச் சுருட்டி வைத்தாள்.
"மல்காந்தி எழும்பு தங்கச்சிமாரையும் எழுப்பி விடு" என்றவாறு குசினிக்குள் சென்று இரண்டொரு ஈரமான விறகுகளுடன் அடுப்பைக் கொழுத்தப் போராடினாள்.
சில காய்ந்த தென்னோலைகளை வைத்த பின்பு அடுப்பு ஒருவாறு எரிய ஆரம்பித்தது.
வெறுந்தேத்தண்ணி ஊற்றி பிள்ளைகளுக்கும் கொடுத்து தானும் குடித்தாள். கஷ்டங்களுக்குப் பழகிப் போன அப்பிள்ளைகள் வெறுந்தேத்தண்ணியைக் குடித்துவிட்டு பள்ளிக்கூடம் போகக் கிளம்பினார்கள்.
"றோட்டுக் கரையால போங்கோ.... தங்கச்சி பத்திரம்" கூறி விட்டு மகள்மார் மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்த எமிலி, சங்கக்கடையில் வரிசை நீளுவதற்கு முன் போவதற்காக அவசரமானாள்.
கிணற்றடிக்குச் சென்று முகம் கழுவி வந்து உடுத்திருந்த சட்டைக்கு மேல் சேலையைச் சுற்றிக் கொண்டாள். ஒலைப்பையொன்றை எடுத்துத் தைத்து வைத்த உடுப்புகளையும் கூப்பன் புத்தகங்கள் நான்கையும் எடுத்து வைத்தாள். வீட்டிலிருந்து புறப்படும் பொழுதே யாரோ "பிள்ளை.....எமிலி" என்று கூப்பிடுவது கேட்டது. அது சைமனின் குரல். இவர் அறுபது வயதை நெறுங்கிய இளைப்பாறிய சங்க இலகா அதிகாரி. அவரிடம் ஏழு எட்டு வீடுகள் சொந்தமாக இருந்தன. தார் றோட்டில் அமைந்திருந்த பெரிய வீடுகள் பலவற்றை பெரிய அளவிலான வாடகைக்கு கொடுத்திருந்தார். பலவருடங்களுக்கு முன் தனது மனைவியின் இறப்புக்குப்பின் தனது இரு மகள்களுடன் பெரிய வீடொன்றில் வசித்து வருபவர். சைமனைக் கண்டதும் எமிலி கலவரமடைந்தாள். "இண்டைக்குப் பத்தாந்திகதி போலக்கிடக்கு.... இண்டைக்கு நான் என்னத்தைச் சொல்லித் தப்புறது..." என்று எண்ணியவாறு கதவைத் திறந்துவிட்டாள்.
"ஆ ஐயா என்ன இவ்வளவு வேளைக்கே வந்திட்டீங்க... நான் இந்த உடுப்புக்களை அந்த கடைவைச்சிருக்கிற கமலக்காவிடம் குடுத்து காசு வாங்கிக் கொண்டுவரத்தான் வெளிக்கிட்டனான்.... காசு கிடைச்சால் நான் பாதி வாடகையென்டாலும்..... கட்டுவமெண்டுதான்...." என்று சொல்லி முடிப்பதற்குள் சைமன் சிரித்தபடி எமலியைப் பார்த்தான்.
"நான் விடிய வெள்ளென வந்தது வீட்டு வாடகை கேக்கிறதுக்கு இல்லையடி... எனக்குத் தெரியுந்தானே நீ புருசனும் இல்லாமல் படுகிற கஷ்டம்... நான் இப்ப வரேக்க உன்ர மூன்று பெட்டைகளும் வெள்ளைக் கொக்குகள் மாதிரி ஒழுங்கையால் திரும்புறதைக் கண்டனான்... நான் வந்தது உனக்கு ஒரு விசயத்தைச் சொல்ல... இங்க வா... நான் நியாயவான் ..உன் மீது இரக்கப்படுறன்..." என்று சொல்லியபடி அவளது கைகளைப் பிடித்தான். எமலி திமிறினாள். கத்துவதற்கு முயற்சித்தாள். ஆனால் அவள் பெண்ணாதலால் அந்தக் காமுகனிடமிருந்து விடுபடுவது அவளால் முடியாமலிருந்தது.

www.tamilarangam.net

# இடப்பெயர்வுகளோடு தொடர்புடைய பெண்விடுதலையின் சாதக்மான தேடல்கள்.

விஜிதா

29.12.90 அன்று ஜேர்மனியின் பீலபீல்ட் நகரில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் சற்று மாறுபட்ட வடிவமே இக்கட்டுரையாகும்.

அன்றைய இலக்கியச் சந்திப்பில் இக்கட்டுரை தொடர்பாக எழுந்த சர்ச்சைகளே இம்மாற்றத்திற்குக் காரணமாயின. 'கலாசாரம்'என்ற பதத்தின் மீதான கேள்விகள் முன்வைக்கப்பட்டபோது அவற்றுக்கான பதிலோ அல்லது எனது விளக்கமோ சரியானதல்ல என்பதைவிட கொடுக்கப்படவில்லை என்றே கொள்ளப்படலாம்.

இதன்பின்னர் இவைபற்றி மேலும் அறியமுயன்றதுண்டு.

இந்தக் காலப்பகுதி அதாவது இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மிகவும் துல்லியமான முடிவுகளை 21ம் நூற்றாண்டிற்கு வழங்கவுள்ளது என்பதற்குப் பல்வேறுவிதமான எதிர்பார்ப்புகள் உண்டு

வரையறுக்கப்பட்ட தேசிய பொருளாதாரம் சர்வதேசசந்தை, அன்றுள்ள ஏகாதிபத்திய-நவகாலனித்துவ சுரண்டல் அமைப்புக்கள்-இன்றைய யுத்தவர்த்தகம், குடிப்பரம்பல் தொடர்பான சர்வதேசச் சட்டங்களிற் திருத்தங்கள் என்பவற்றிற் கேள்விகள் சர்ச்சைகள் வைக்கப்படுவதுபோல, பண்பாடு தொடர்பாகவும் கேள்விகள் வைக்கப்படுகின்றன.

'பண்பாடு', 'கலாசாரம்'என்ற இரு பதங்களும் எம்மிடையே சரளமாக ஆனால் தெளிவற்ற கருவை உடையதாகவே பாவிக்கப்பட்டுவருகின்றன. இவை ஒரு எல்லைக்குட்பட்ட பண்பு நிலைப்பாட்டை விளக்கமுடியாத வரையறைப்படுத்தி சொல்லமுடியாத போதும், ஒரு மனிதக் குழுவின் பண்பட்ட நிகழ்வுகள் எனும் அமைப்புக்குள் ஏன் கலை-இலக்கியம் அடங்கக்கூடாது. எனவே இதில் எந்தச் சொல்லானாலும், 'Culture' எனும் ஆங்கில வார்த்தை சுட்டும் கருவூலத்தையே உள்ளடக்குகின்றன.

இவ்வாறு கி.பி.1ம் நூற்றாண்டின் ஒரு மனிதக்குழு வரையறுத்துவிட்ட 'பண்புவெளிப்பாடுகள்

20ம் நூற்றாண்டின் போது எந்தவகையிலுமே உதவப்போவதோ உயர்வானதாகவோ இருக்கமுடியாது. எனவே உலகின் எந்தக் குழுவேனும் காலத்துக்குக் காலம் வரவேற்க உகந்த மாற்றங்களை உள்வாங்கியே தீரவேண்டும். இதில் தமிழர் மட்டும் விதிவிலக்கல்ல.

இன்றைய விஞ்ஞான உலகின் வெகுஜனத் தொடர்பு இதனை மேலும் ஊக்குவிக்கின்றது. இவ்வேளையின் ஆண் சார்ந்த பொருளாதார அடிமைப்பாட்டுக்கு நிகராக பண்பாட்டுக் காரணிகளாலும் நாம் அடிமைப்படுத்தப்பட்டிருந்தோம். ஏனைய முன்சொன்ன துறைகளில் ஏற்படும் நவீன விருத்தியைப் போலவே பெண்விடுதலை, அது தொடர்பான கருத்து மூலங்கள், புரட்சிகரச் செயற்பாடுகள் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் அபிவிருத்தி கண்டுள்ளது.

இதனை பிரக்ஞை பூர்வமாக முன்னெடுத்துச் செல்வதே இன்று எம்முன் உள்ள பணியாகும்.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட மேற்படி தலைப்பானது சற்று விரிவானது. இதனை நிறைவாகத் தரவல்ல ஆய்வோ ஆற்றலோ என்னிடம் இல்லை என்பது தெரிந்தும் இதன்மூலம் உருவாகும் விவாதங்கள், தொடர்ச்சியான பார்வை என்பன சாதகமாக அமையவேண்டும் அதிகரிக்கவேண்டும் எனவே இதனைத் தொடக்கிவைக்கிறேன்.

## இடப்பெயர்வும் காரணங்களும்

இன்றைய மூன்றாம் உலக நாடுகளின் பிரஜைகள் அபிவிருத்தியடைந்த நாடுகளை நோக்கி நகரும் செயற்பாடுதான் இடப்பெயர்விற் பெரும்பங்காற்றுகிறது. இதில் கல்வி, வேலைவாய்ப்புகள் தொடர்பான புலப்பெயர்வு கணிப்பிற்குள் இடம்பெறாத சிறுதொகை என ஆக்குமளவு அகதிகளின் புலப்பெயர்வு இடம்பெற்றுள்ளது. இது அரசியல் பொருளாதாரக் காரணங்களுடன் பின்னிப்பிணைந்த ஒரு நாடகமே ஆகும். இந்த நாடகத்தில் உலகம் பூராகவும் இன்று

www.tamilarangam.net

ஏறத்தாழ 20 லட்சத்திற்குமதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர். இதில் 8.5 லட்சம் பெண்கள் எனவும் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.

பல்வேறு விதமான வரலாற்றுக் களங்களிலிருந்து அகதிகள் வந்தபோதும் ஒருவித பொதுத் தன்மையுள்ள நாடுகள் நோக்கியே நகர்ந்துள்ளோம். உழைப்புச்சக்தியை வாங்கும் நோக்கம் இதனூடே இந்நாடுகளுக்கு மறைமுகமாக இருப்பது போலவே விற்கும் நோக்கமும் மறைமுகமாக இருப்பதால், இந்நாடுகளின் தொடர்ச்சியான வதிவுக்கான விருப்புடையவர்களாகவும் நாம் காணப்படுகிறோம்.

இவைகளை மனதிற்கொண்டு இங்குள்ள பெண்விடுதலையின் சாதகமான நிகழ்வுகளைக் காண்பதற்கு முயல்வோம். உரிமைகள், உழைப்புச்சக்தி, சரணடைப்படல், சமூகவாழ்க்கை, பண்பாட்டு அம்சங்கள் எனும் வெவ்வேறு பகுதிகளிடம் சுருக்கமாகப் பார்ப்போம்.

உரிமைகள்

எந்த அடிஅமைப்புக்கள் ஒரு சமூகத்திலுள்ளதோ அவற்றுக்கேற்பதாகவே சட்டங்கள், தேசவழமைகள் இடம்பெறலாம். பிரபுத்துவம் அரைநிலப்பிரபுத்துவம் கோலோச்சுகின்றதான எமது வரலாற்றுக்களங்களில் பஞ்சாயத்துத்தீர்வுகள், மதநீதிமன்றங்கள் போன்ற மிகக் கொடூரமான ஆணாதிக்க வெறித்தனமான அமைப்புக்கள் பெண்ணின் வாழ்வுக்குக் காட்டிய சட்ட உரிமைகளைவிட பிரபுத்துவ மாற்றங்களினால் ஒருபடி உயர்ந்து, உற்பத்தி உறவில் தொழிற்சாலைகளோடு தம் தொடர்பை வைத்துக்கொண்ட இந்தநாடுகளில், மனித உரிமைகள் தொடர்பான சட்டங்கள் தொழிலாளி வர்க்கத்தின் நெருக்கடியால் சற்று கூடுதல் ஜனநாயகத் தன்மையுடையனவாகவே காணப்படுகின்றன.

இருப்பினும் ஆணாதிக்க முனைப்பு சற்றும் குறைவுபடாத அமைப்புகளாகவே இவையும் காணப்படுகின்றன. காரணம் பெண்ணின் பொருளாதாரச் சார்பு பெருமளவு ஆண்களிலேயே தங்கி நிற்பதற்கான நடைமுறைகளே இங்கும் காணப்படுகின்றன. ஆனால் இவைகளை இனங்காணவும், உரிமைகளுக்காக ஐக்கியப்படவும் பேசவும் அங்கிருந்ததைவிட கூடுதலான ஊடகங்களை நாம் பயன்படுத்தமுடிகிறது.

இதைவிட, எமது நாட்டின் இன்றைய சூழலில் ஆணோ, பெண்ணோ யாருமே வாய்திறக்கவோ, கைஅசைக்கவோ உரிமையற்றவர்கள். பெண்கள் துப்பாக்கி ஏந்துகிறார்கள் என்பார்கள் இது தன்னிச்சையான சுதந்திர எண்ணங்களோடல்ல எவ்வாறு? யாருக்காக என்பதெல்லாம் அங்கு யாராலுமே கேட்கப்படமுடியாதவை.

கைகளிரண்டையும் துப்பாக்கியிற் கட்டி, கால்கள் இரண்டையும் நீளபாவாடைக்குள் தடமிட்டுவிட்டு விடுதலையையும், கலாசாரத்தையும் ஒரே குரலில் ஒலித்தவர்கள் தம் உடற்பசிதீர்த்து மண்ணிற் புதைத்த பெண்களின் தொகை வரலாறு சொல்லும்.

பள்ளிவாசலுக்குள் பதைபதைக்க கற்பழித்துக் கொல்லப்பட்ட இஸ்லாமிய யுவதிகள் பெண்களில்லையா?

இவைகளை எல்லாம் இந்த அளவிலாவது பேசுவதற்குள்ள இந்த உரிமைகூட இடம்பெயர்ந்ததாலேயே முடிகிறது என்பதை மறுக்கமுடியாது.

மற்றும் ஒருவரை ஒருவர் சற்றேனும் ஆதிக்கம் செலுத்தாத மனித ஆளுமையுள்ள ஒரு சூழல் உருவாகும்வரை உரிமைகளுக்கான போராட்டம் தொடரும் என்பதால் இன்று நிறைவு பெறாதவைகளைப் பட்டியலிட முடியாது.

வலுமூலங்கள்

(அ) உழைப்புச்சக்தியும், ஸ்தாபனப்படலும்:-

ஒருபுறம் தொழில்வாய்ப்பின்மையும் மறுபுறம் பற்றாக்குறையும் நிலவிய எமது வரலாற்றுச் சூழலில் போதுமான அளவு ஆண்கள் கிடைத்ததோடு எஞ்சியும் காணப்பட்டனர். எஞ்சிய தொகை ஆண்களும் கூட பெண்களுக்கான தொழில்வாய்ப்பிற் போட்டி இட்டது போக மீதியாகவுள்ள மிகக் குறுகிய அல்லது தவிர்க்கமுடியாத தொழில்களே எமக்குக்

www.tamilarangam.net

கிடைத்தன. இது மிகக் குறைந்த தொகையே, அதிலும் கூடுதலானவர்கள் பெண்கள். வேலைவாய்ப்புள்ள இலங்கையே இவ்வாறெனில் ஏனைய குறைவிருத்தி நாடுகள் எவ்வாறு?

இதனாற் எமக்கான பாட்டாளிவர்க்க சிந்தனைவயப்படுதல், பெண்கள் ஸ்தாபனமயப்படுதல் என்பன அறவே நடைபெறவில்லை. இது பெண்விடுதலை தொடர்பான சிந்தனை ஓட்டத்தின் மிகப்பாதகமான ஒரு அம்சமே!

நாம் இன்று இடம்பெயர்ந்துள்ள அநேக நாடுகளில் நாமும் வேலைவாய்ப்பினைப் பெறுகின்றதான வாய்ப்பிருக்கும் போதும் "பழைய குருடி..." களாகவே இருக்காது வேலைகளில் ஈடுபடுவதால் மாற்று சமூகங்களின் தொடர்பு, சூழல் பற்றிய விரிவான அறிவும் பார்வையும், நேரடியான உழைப்பின் ஈடுபாடு, ஸ்தாபனமயவாக்கம் போன்ற பயனுள்ள அம்சங்களைப் பெறமுடிகிறது, முடியாதோர் நிச்சயம் முயலவேண்டும்.

(ஆ) உற்பத்திமூலம்:

குறைவிருத்தி நாடுகளின் ஜனத்தொகைப் பெருக்கம் ஒரு அச்சுறுத்தலாகவும், அதிகரித்துச் செல்லும் வறுமை கைத்தொழிற் பொருட்களின் 'வாங்குசக்தி' யைக் குறைத்துவிடும் எனவும்; மேற்குலகு சிந்திக்கத் தொடங்கியது. இதனால் குறைவிருத்திப் பொருளாதார நாடுகளில் மனிதவள உற்பத்திக் கட்டுப்பாடுகள் மிகத்தீவிரமாக்கப்பட்டன.

குடும்பக்கட்டுப்பாடு தொடர்பான கருத்துகளுக்கும், கருத்தடை சாதனங்களுக்கும் எமது நாடுகள் சந்தையாக்கப்பட்டதுடன், வேண்டாத உற்பத்தியொன்றினை ஆற்றுகின்ற மனித இயந்திரங்களோ நாம் என எம்மை நாமே கேவலமாகக் கருதும் வாய்ப்பே அங்கு எமக்கு எஞ்சிநிற்கின்றது.

அதே எண்ணத்தோடு வந்த நாம் இங்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு உணர்வினைப் பெறுவது மட்டுமல்லாமல் மேற்குலக முதலாளித்துவம் அதற்குத் துணைபோகும் ஐ.நா.சபை போன்றவற்றின் இரட்டை வேடத்தையும் அறிந்துகொண்டோம்.

அதாவது 15 20 வருடத்தின் பின்னர் தேவையான தொழிலாளரை (Lebour supply) அளிப்பதற்காக இன்றே தாய்மாரை ஊக்குவிக்கின்றன. பிரசுரங்கள், கருத்துக்கள், மானியங்கள், உதவிகள் யாவும் வழங்கப்படுகின்றன.

எனவே பெண் வேண்டாத இயந்திரமல்ல, ஒரு காலத்தில் முதலாளித்துவத்தையே அச்சுறுத்தவல்ல மனிதவள உற்பத்திமூலம் என்ற நிறைவான எண்ணம் ஏற்படக்காரணமாக இருந்தது.

ஒரு கைப்பாவனை

ஏற்பட்டதற்கும்- இன்றுவரைக்கும் கற்புக்கு விளக்கம் தரவேண்டிய அவசியம் எனக்கில்லை. அத்தகைய அர்த்தமற்ற ஒரு சொல் ஆண்களின் கேடயமாக உதவிவிடுவது உண்மையே. அதுநிற்க இந்த நாடுகளில் சில ஆண்டுகளாக அடைப்பட்டிருந்த, இருக்கின்ற இளைஞர்களுக்கு மனைவியர் அவசியமாகி, வந்துவிட்டால்....!

வெளியே செல்ல அனுமதியில்லை, வேலை செய்ய அனுமதியில்லை, உள்ளேவைத்து கதவுபூட்டிச் செல்வது. ஏஜென்சி எனும் இராவணர்கள் விமானத்திற் கடத்திவரும்போது கற்பு இழக்கப்பட்டதா? என தினமும் வீட்டிற்குள் தீக்குளிக்கவைக்கும் எத்தனையோ கணவர்கள் இங்கேயும் உண்டு. இத்தகைய நெருக்கடிகள கனடா, பிரான்ஸ், சுவிஸ், ஒல்லாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களிடம் வரலாற்றுச் சூழலில் என்றுமில்லாத அளவு விகிதாசாரத்தில் விவாகரத்துக்களை ஊக்குவித்துள்ளது. கிழக்கைரோப்பிய நாடான போலாந்தின் இடம்பெயர்ந்த மக்களிடமும் இது அதிகமாகவே காணப்படுகின்றது.

ஒரு ஆணும் பெண்ணும் மூன்றாவது நபருக்கு பிரச்சனையில்லாமலோ மூன்றாவது நபரைத் தோற்றுவிக்காமலோ சிநேகமாகப் பழகுவதில் என்ன தவறுண்டு. சரி இவைகள் தவறுகள் என்றாற் கூட இதன் 50%மான ஆணின் பங்கு ஏன் துலாம்பரப்படுத்தப்படுவதில்லை என்பதான கேள்விகள் எழுவதில்லையா?

ஆம். கொள்வனவுவரை அல்லது கொள்வனவின் பின்பான பாவனையின் போது தவிர்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனையவேளைகளில் பெண்ணின் உணர்வுகள் மதிக்கப்படுகின்றனவா? இல்லை. குடும்பத்தலைவனுக்காக வாழ்கின்ற குத்தகைப் பாலுறவைக் 'கற்பு' நியாயப்படுத்துகிறது. சமூக நிர்ப்பந்தத்தால் பாட்டாளிவர்க்கப் பெண்களிற் சிலர் பிரபுத்துவ முதலாளித்துவ நாடுகளின் விபச்சார விடுதிகளிற் பணிபுரிவதும் கூட முழுமையான உணர்வு சுதந்திரம் என்றல்ல என்பதும் அந்தத் தொழிலாளிகள் தினக்குடும்பம் நடத்துமாறு ஊக்குவிக்கப்பட்டுச் சுரண்டப்படுபவர்கள் என்பதும் இந்த நாடுகளின் நடைமுறையால் நன்கு வெளிச்சமாகிறது.

### சமூகஅந்தஸ்து

கற்புநெறி தவறெனச் சொல்வது, அவை தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்வைப்பது, சமூகநெறிமுறைகளுள் அமையாது நடப்பது தனது உணர்வுகளை வெளிப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஒரு ஆணின் ஈடுபாடு காரணமாகக் குறைந்துவிடக்கூடிய சமூக அந்தஸ்தைக் காட்டிலும் பெண்ணிற்கு அதிகம் போய்விடுவதாகக் கருதுவதும், என்ன வேண்டுமானாலும் செய் எங்கள் குடும்பமானத்தைக் கப்பலேற்றாதே என்பது போல தந்தையோ, ஆண் சகோதரர்களோ சொல்வதும் கூட ஒரு ஆணாதிக்கவடிவமே இருந்தும் இத்தகைய ஆணாதிக்க முனைப்புகள் அதிகமாகப் பூர்ஷுவாக்களிடமே காணப்படுகிறது.

இவர்கள் தமது அந்தஸ்துகளையும் பேணிக்கொண்டு அதேவேளை விடுதலைபற்றியும் பேசுபவர்கள், கற்புக் கொள்கை தவறு என்றோ குடும்ப அமைப்புகளின் இறுக்கம் குலைவது முற்போக்கு என்றோ சொல்ல இவர்கள் முற்படுவதில்லை. சரணாகதி வர்க்கமான இந்தக் கேவலமான வர்க்கத்திடமிருந்தே நம்மில் அநேக பெண்கள் வந்திருப்பதால் இன்றைய பெண்விடுதலை அமைப்புகளிலும் இந்தக் குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. உண்மையான பாட்டாளிவர்க்க உணர்வை நாம் பெறுவதும் ஸ்தாபனங்களிற் பாட்டாளிவர்க்கப் பெண்களின் கைகளை அதிகரிக்கச் செய்வதுமே முதலில் அவசியம் என்பதை மறந்து எமது சொந்தப் புகழ், பிரபல்யம் என்பவற்றுக்காக ஈடுபாடுகாட்டுவதும், நெளிவு-சுளிவுகளோடு கருத்துவைப்பதும் பாட்டாளிவர்க்கத் துரோகம்.

எனவே எமது வரலாற்றுச் சூழலில், பிரபுத்துவ மிச்ச சொச்சங்களிடம் இருந்துவந்த அந்தஸ்துக் காப்பு இன்றைய இந்த சூழலில் அர்த்தமற்றது என்ற உணர்வைப் படிப்படியாக வளர்க்கின்றது. வீட்டுக்கதவுகளோடு விவகாரங்களை ஒடுக்கிக் கொள்வதான நடைமுறையில் மற்றவர் அயலவரின் இகழோ- புகழோ எதுவும் யாரையும் பாதிப்பதில்லை. இத்தகைய வளர்ச்சியும் மேலே கூறிய தன்மையைக் குறைக்க உதவலாம்.

எனவே நாம் சரியென ஏற்பவைகளைத் துணிச்சலாக முன்வைப்பதும், பிற்போக்கான பண்பாட்டு நடைமுறைகளை வன்மையாக எதிர்ப்பதும் எம்மால் மேற்கொள்ளப்படவேண்டும். இந்நடவடிக்கை தவறு எனத் தவறானவர்கள் கூறுவார்கள் என்பதற்காக சரியானதை முன்வைக்காதிருக்கும் தவறுக்கு நாம் இலக்காகக் கூடாது.

### சமூகவாழ்க்கை

"குடும்ப-அமைப்பானது சமூகவாழ்விலிருந்து எம்மைத் தள்ளிவைக்கிறது" என்கிறார் எங்கெல்ஸ்

உலகின் அநேகமான சமூகக் குழுக்களிடம் 'வாழ்க்கை'என்பதன் அர்த்தம் தவறாகவே கொள்ளப்பட்டுள்ளது. சமூகவாழ்க்கை, குடும்பவாழ்க்கை எனப்பிரித்து கூடியபட்சம் நிறைவான தன்மைகளையுடைய பல குடும்பங்களின் ஒருங்கிணைந்த கட்டுக்கோப்புடைய குழுவாழ்வே 'சமூகவாழ்வு' என்று அர்த்தப்படுத்தப்பட்டுவிட்டது. இத்தகைய தன்மையும் எண்ணக்கருவும் யாழ்ப்பாண சமூகத்தவரிடம் நன்றாகவே வேரூன்றிவிட்டது.

"எனவே சமூகத்தின் சிறு அலகான குடும்பத்தில் தலைவனைப் போஷித்து நிற்பதே பெண்ணின் சமூகவாழ்வுப் பணி" என்பதும் நீதியாக்கப்பட்டுவிட்டது.

இதனால் எமது சமூகவாழ்வு பூச்சியம் என்றே

www.tamilarangam.net

கொள்ளவேண்டும். இதனை வெறுக்கும் புரட்சிகர மனப்பாங்குள்ள சில ஆண்களும் கூட..... குடும்ப அமைப்பின் இறுக்கம்- பெண்ணின் சமூகவாழ்வு இரண்டையும் ஒரே வண்டியில் ஏற்றி அனுப்ப முனைகின்றனர். இரண்டும் வேறுபட்ட திசை செல்வன.

குடும்ப செயற்பாடுகளில் முடக்கிக் போடாமல் சுதந்திரமான சமூகத் தொடர்புகளை அங்கீகரிக்க ஆண்கள் விரும்புவதே இல்லை.

இந்த முன்னேறியதாக நாம் எண்ணிக் கொள்ளும் சமூகங்களிற் கூட வாழ்க்கையின் சரியான அர்த்தம் தெரியாத போதும் மேற்படி தன்மையாற் பெண்களிடம் ஏற்படும் சுதந்திரமான புளக்கமோகம் அவர்களை வெளிக்கொணர்வதும் எந்த நேரங்களிலும் உலவத்துணிவதும் வரவேற்புக்குரிய அம்சங்களே. மனிதவாழ்வுக்குத் தவறான அர்த்தம் கொடுப்பதில் உதவ இந்த சமூகஅமைப்பின் அனைத்து சாதானங்களும் பயன்படுவதால், இவ்வாறு வெளியே வந்த பெண்கள் தமது பொழுதினை வீண்பொழுதாகக் கழிப்பதுவும், சில இன்னல்கட்குட்படுவதும் இன்று ஏற்பட்டாலும் இந்தத் தன்மை உடைவின் விளிம்பில் இயல்பானதே என்று விளங்கிக்கொண்டு சமூகவாழ்வின் சரியான வழிமுறைக்குள் ஈடுபடுத்தவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையாத நாடுகளைவிட பன்மடங்கு அதிகமான தலா வருமானப் பங்கீடுள்ள போதும் 3:2 என்ற விகிதத்தில் குடும்ப அமைப்பின் உடைவு இங்கு காணப்படுவது வேறு எதனை எமக்குப் போதிக்கின்றது.

இருந்தும் இந்த நாடுகள் கூட எமது பொருளாதாரச் சார்பும் வேறுபல அம்சங்களிலும் ஆணைச் சார்ந்தே நிற்கும்படி போதிப்பதும், சட்டவாக்கங்களும் உள்ளன. விவாகரத்தின் பின்பு பெண் ஒரு அங்கவீனரைப் போல பார்க்கப் படும் நிலையும், விவாகரத்தைப் பெண்கள் விரும்பாதபடியே உபசரிக்கின்றன.

ஆம். "பேய்கள் அரசாண்டால் பிணந்தின்னும் சாஸ்திரங்கள்" என்பது போல ஆணாதிக்க முனைப்புள்ள அரசுகளும், சட்டங்களும் வேறு எதைச் செய்யமுடியும்.

## பாலியற் சுதந்திரம்

ஒரு தாரக் குடும்பமுறை ஏற்பட்டது முதல் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது சமூகவாழ்வுடன் பாலியற் சுதந்திரமுமாகும்.

ஒரு யுவதி பருவம் அடைந்த அன்றிலிருந்தே ஒதுக்கப்பட்டவளாய், உரிமைகளற்றவளாய், ஒருவித விற்பனைக்குத் தயாராகும் பொருளாய் அதை எம்மிடமே நியாயமாக்கிக் கொண்டே வளர்க்கப்படுகின்றோம். பின் திருமணத்தின் போது உடலையும் உணர்வுகளை ஒட்டுமொத்தமாக ஆணிடம் ஒப்படைத்துவிட்டு... எமது விருப்பு-வெறுப்புகளை வெளியிட்டாற் கூட எப்படி எண்ணுவரோ என்ற இத்தனையுமுட்பட்ட ஒரு பாரிய இராஜதந்திரம் இருந்தால் மட்டுமே இந்த அற்பத்தனமான உடல்உணர்வைக் கூட பெறமுடியும்.

இந்த அற்ப விடயத்துக்காகவே எமது சிந்தனை செயற்பாடுகள் எல்லாம் ஒருமுகப்படுத்தி வாழ்வு பூராகவும் முள்ளின் மேல் நடக்கின்றோம். இது எவ்வாறு சுதந்திரமாகலாம்?

எனவே இதனை மீறிவிடுவது தொடர்பான சில கருத்துக்கள் 'சமூகஅந்தஸ்து' எனும் தலைப்பிற் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு மீறல் என்ற சொல்லே சிலரிடம் நராசமாக செயற்படலாம்.

பாலுறவு தொடர்பான கருத்துக்களின் ஒரு பெண்ணின் பங்கு சித்தரிக்கப்பட்டதிலுள்ள வஞ்சனை மிக்க கருத்துக்களே இவ்வாறு சிந்திக்கவைக்கின்றன.

பாலியல் விருப்பு என்பது ஒரு விலங்கின் பலமோ, பலவீனமோ அல்ல. அது ஒரு உணர்வு. எந்த விலங்குமே பூர்த்தியின் பின்பும் எந்த உணர்வையும் தொழிலாக மேற்கொள்வதில்லை.

ஆனால் மனிதன் என்று மற்றவனின் உழைப்பைத் தனதாக்கத் தொடங்கினானோ, அன்றிலிருந்து ஆரம்பமான வர்க்கத்தன்மையின் ஒன்று ஒன்றைக் கெடுப்பதற்காக கொடுத்த கருத்துக்கள், வாய்ப்புக்கள் என்பவற்றிலேயே பெண்கள் பற்றிய கருத்துக்கள், விபச்சாரம் செய்யும் வாய்ப்புக்கள் என்பனவாகும்.

www.tamilarangam.net

பூர்ஷுவா ஆண்களின் ஆவலின் வடிகாலாக இந்த சமூக அமைப்பினால் வஞ்சனைக்குட்படுத்தப்பட்ட உழைப்பாளித் தோழிகளே இன்று நீங்கள் இழிவாகப் பேசும் விபச்சாரிகளான பெண்கள். இவர்களிடம் சுதந்திரம் உண்டென்றல்ல.

இவ்வாறு சிந்திக்கவும், பேசவும், இதற்கான தகவல்கள், நேரடி அனுபவங்கள் என்பனவும் கிடைப்பதோடு, சமூகக் கட்டுப்பாட்டுக்குள் முடக்கிக்கொள்ள அவசியமற்ற தன்மையும் எமக்குக் கிடைத்துள்ளது வாய்ப்பில்லையா. எனவே பயனுள்ள முறையிற் செயற்படுத்துவோம்.

வீட்டிலும், வெளியிலும் சுரண்டல்

"ஒரு தவறான பண்பாடு மீண்டும் அதே தவறுள்ள சமூகத்தை உருவாக்கித் தருகிறது" என்பது உண்மை.

"பின்தூங்கி முன்னெழுதல்......." என்ற பிரபுத்துவ கலாசார வரிகள் அப்பட்டமாக ஒரு பெண் அதிக நேரம் உழைக்கவேண்டியவள் என்று கூறி, அது சமூகநீதியாகக் கொண்டது.

அதேவேளை பெண் வலுக்குன்றியவள் என்ற மாய வரிகளால் எமது உழைப்பைச் சுரண்டக் காரணம் கற்பித்தது. தொழிலாளிவர்க்கப் பெண்களிடமே தினமும் இதனை ஏற்கவைத்தது. பிரட்டுக்களத்தில் வேலை பங்கிடும் போது கூட இலகுவான வேலைகள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டன. அங்கே ஆண்கள் செய்வன எம்மால் முடியாதவை அல்ல. அவை முடியாதவை எனும் மன உணர்வு எம்மிடம் வலிந்து புகுத்தப்பட்டவை.

ஏனெனில் சமநேர வேலைவாங்கிக் கொண்டும் தாம் தரும் குறைந்த ஊதியத்தை நியாயப்படுத்துவதற்கேயாகும்.

1, இவைகளை சிந்திக்கவோ, வெளியிடவே தடையாக இருந்த கலாசார சூழலிருந்து விடுபட்டு வந்துள்ள எம்மிற் சிலருக்கு தொழிற்சாலைகளில் வேலை கிடைத்துள்ளது. இதன்மூலம் நேரடியான பாட்டாளிவர்க்க ஈடுபாடு, சமூகத்தொடர்பு, அறிவியல் விருத்தி இவைகளினூடே தூய பாட்டாளிவர்க்க உணர்வினைப் பெறவாய்ப்புக்கள் உண்டு.

2, பகுதி நேரவேலைகள், வீட்டுப்பணிகளில் ஈடுபடும் எம்மவர்க்குக் கூட இதுவரை காலமும் தாம் சொந்த வீடுகளில் செய்த வேலைப் பெறுமானம் சக்தி இழப்பு என்பன புலனாகும்.

3, கணவனைப் போல 8.00 மணிநேர வேலையிலீடுபட்ட மனைவி மீண்டும் வீட்டுவேலைகளைக் கவனிப்பதான எமது மேலதிக உழைப்புபற்றிய சிந்தனை ஓட்டம் இடம்பெறும்.

4, தொழில்களைக் கௌரவக் குறைவாக எண்ணியதும் அலுவலகப் பணிகளோடு நின்றுவிட்ட மத்தியதர பூர்ஷீவாத்தன்மையிலிருந்து வந்த எம்மில் அநேகர் பலதரப்பட்ட தொழில் ஈடுபாடு பெறுதல் மிகமிக வரவேற்கக்கூடியது.

5, அடுத்து இங்கு வந்தும் கூட பத்தாவுக்கேற்ற பதிவிரதைகளாக நான்கு சுவர்களுக்குள் அடங்கி இருக்கும் எமது சகோதரிகளை வெளியே கொணர்ந்து தொழில்களில் ஈடுபடுத்துவதே சமூகஈடுபாட்டிற்குள் அவர்களை கொண்டுவருவதற்கான முதற்படியாகும்.

இவ்வாறு என்னாலியன்ற சில யன்னல்களினூடே இந்த அடைபட்ட உலகைப்பார்த்தபோது, "அனைத்து விடுதலைக்குமான சாதகமான நிகழ்வுகளை, நேற்றைய சமூகத்தை விட இன்றைய சமூகம் சற்று அதிகமாகவே கொண்டுள்ளது" என்பதை அனுபவவாயிலாக உணரமுடிந்தது.

இந்த அடிப்படையில் காலாகாலத்தில் ஆண்கள் மீதான எமது பொருளாதாரச் சார்பு அறவே அற்றுப் போதல், பெண்களைக் கீழ்நிலைப்படுத்தும் பண்பாட்டு அம்சங்கள், கலை- இலக்கியங்கள் ஒழிதல் என்பவற்றிலும் தீவிரமான வளர்ச்சி ஏற்படும் என நம்புகிறேன்.

ஆகவே பெண்விடுதலையைத் தீவிரப்படுத்தும் ஸ்தாபன அமைப்புகளும், நடவடிக்கைகளும், புரட்சிகரப் போராட்டங்களும் அவசியமான காலங்கள் இதுவாகவே இருக்கும். இவை எமக்காக எம்மாற் செய்யப்படவேண்டியவை. எனவே எமது ஐக்கியம் அதிக பயனுள்ளதாக இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவளில்லா அர்த்தங்கள்!

இயற்கையின் மாற்றமொன்றை
செயற்கையாய் சித்தரிக்க
அர்த்தமில்லா சடங்கொன்று
அவையேறிக் கொண்டிருக்க;

மண்டபம் மாலைகள்..
மற்றவைகளும் சேர்வாக,
கண்ணிறைந்த அலங்கரிப்பில்,
கன்னியவள் காட்சியாக
எண்ணில்லா இளசுகள்..
ஏறிட்டுப் பார்த்திருக்க,
சின்னம் சிறிதுகள்..
விளக்கமதை தேடி நிற்க,
சடங்கு நடக்கிறது
சபையில் நவீனமாக!

அவைக்கான நடப்புகள்
அடுக்கடுக்காய் சபையேற
சேயவளின் பிறப்புக்கான
தாயவளைக் காணவில்லை..?
இந்த விளக்கமிதை
தேடியங்கு போகையிலே...
பல
வருடங்கள் முன்னாக...
தாரம் இழந்தவளாம்...
பூவோடு பொட்டும்
புறப்பட்டு போனதாம்..
புறப்பட்ட சேதியிது!

வெள்ளைச் சேலைக்குள்..
வில்லங்கமாய் தள்ளிவிட்டு
வெற்றிடமாய் அவளிடத்தை
இருட்டடிப்பு செய்துவிட்டு...
வேற்று மனிதரெல்லாம்
வேடிக்கை.. விந்தையிது...!
வாழ்வின்
போராளி பெண் இவளை
புறக்கணித்து விட்டு
யாரோ நடத்துகிறார்
நவீன நடத்தினராய்
அர்த்தமில்லா சடங்கிது
அவளில்லா அர்த்தங்கள்.

வைபவம் முடிந்திட
வந்தவர்கள் போயாக...
தொடரும் போராட்டம்
தொடர்ந்துழைப்பாள் தனியாக
அடுத்து வரும் சடங்கிலும்....
அவர்கள் பங்கேற்பார்கள்...

சகோதரி!
அர்த்திமில்லா சடங்கிவை
அரங்கேற்ற வேண்டுமா?
அந்நியப்படுத்தி- உன்னை
அடக்கிவிட்ட சேதியினை
எப்போது உணர்வாய்?
அப்போது விழித்துக் கொள்.



கவி ஆக்கம்: முல்கைம்- கோசல்யா சொர்ணலிங்கம்.

www.tamilarangam.net

**சினிமா மற்றும் கலை, கலாசார அம்சங்கள் பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக சித்தரிக்கும் சந்தர்ப்பங்களும், அவற்றை நிராகரிப்பதற்கு நாம் எடுக்கும் நடவடிக்கைகளும் பற்றிய சிறுநோக்கு.**

— புஷ்பவதி

இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பில் பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக சித்தரிக்கும் காரணிகளையும், சந்தர்ப்பத்தையும் நோக்குவோமானால் உண்மையிலேயே பெண்களை இன்றைய சமூக அமைப்புமுறை இரண்டாந்தர பிரஜைகளாக வைத்துள்ளது என்ற உண்மையை தெட்டத்தெளிவாக நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

இவ்வகை சந்தர்ப்பங்களுக்கு மனிதர்களின் அழகியல் உணர்ச்சியின் வாயிலாக வளர்த்தெடுக்கப்பட்ட கலைகளும் கலைச்சாரங்களும், சினிமா, மற்றும் இன்னும் பிற ஊடகங்கள் வழியமைக்கின்றன.

ஒரு சமூகத்தின் ஆணிவேராக இருப்பது கலாசாரம். கலாசாரம் என்றதும் எம்மத்தியில் உடனே பிரதிபலிப்பது பெண்களின் பூவும், பொட்டும். இவ்வகை பிரதிபலிப்பைப் தருவதற்கு கலைகள் உடந்தையாக உள்ளன. இவற்றை பாதுகாக்கின்ற வடிவமாக இன்றைய சினிமா உலகம் உள்ளது. ஏனெனில் இவை மக்கள் மத்தியில்- மக்கள் மனங்களில் ஆணிவேராக பதிவு செய்கின்ற முறை சினிமா உலகிற்கு கைவந்தகலை.

ஒரு சமூகத்தில் அர்த்தமற்ற நிகழ்வுக்கு ஆணிவேராக இருப்பது கலாசாரம், கலாசாரம் என்றதும் எம்மத்தியில் தோன்றுவது. பெண் தான் கலாச்சாரத்தை பேணிக்காக்க வேண்டியவள். எந்தவொரு குளிர்நாட்டிலும் சரி அவள் கலாசார உடை அணியவேண்டும், அதாவது சேலை, பூ, பொட்டு மற்றும் மத அனுஷ்டானங்களுமே அவள் பேணிகாத்துக் கொண்டு இருக்கப்படவேண்டும். கலாசாரத்தில் பெண்களின் குணங்களையும் மிகைப்படுத்துகின்றார்கள். இதற்கு சினிமா உலகம் நல்லதோர் எடுத்துகாட்டு.

இன்றைய சமூகத்தில் கலைகளிலும் பெண்களை இரண்டாம்தர பிரஜையாக சித்தரிக்கிறார்கள்.

உண்மையிலேயே ஆணாதிக்க சமூக அமைப்புமுறை பெண்களை இரண்டாந்தர பிரஜைகளாக வைத்திருப்பதற்கு பேணிக்காப்பதற்கும் மேற்கூறிய செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றன.

சினிமா, மற்றும் கலை, கலாசாரம் போன்றவற்றில் பெண்களை இரண்டாம்தர பிரஜையாக சித்தரிக்கும் சந்தர்ப்பங்களை இக்கட்டுரையில் விபரிக்க வேண்டியதில்லை. காரணம் பல கட்டுரைகளில் பலர் விபரித்துள்ளார்கள். அத்துடன் மே.ஜேர்மனியில் தொடரும் இலக்கியசந்திப்பு பெண்கள் சந்திப்பு இவற்றில் பலர் விபரித்து, விவாதித்தும் உள்ளார்கள். எனவே இவற்றை எப்படி எதிர் கொள்வது. எப்படி இவ் அவலநிலைமையை அழிப்பது போன்ற சிந்தனைகளும், பெண்களை நிஜமாக இரண்டாந்தர பிரஜைகளாக்கியுள்ள நிலைமையை உடைத்தெறிவது பற்றிய நோக்குகளுமே இனிமேல் விரிவாக பார்க்கப்பட வேண்டியுள்ளது.

எம்மை பொருத்தவரைக்கும் கலை, இலக்கியங்கள் மற்றும் இன்னபிற விஷயங்களும் வர்க்கச் சார்புக்கமையவே செயல் படுத்தப்படுகின்றது.

எனவே பெண்ணிலைவாதத்தையும், பாட்டாளிவர்க்க விடுதலையையும் ஒருங்கிணைத்து செழுமைப் படுத்தி செல்வதும் அதனூடாக பெண்விடுதலை சார்ந்த தேடல்களையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஆற்றவேண்டியுள்ளது. இவ்வமைப்பின்றி பெண்நிலைவாதிகள் தனித்து தம்மையொரு வர்க்க நிலைக்கு உட்படுத்திச் செயலாற்றுவது குறுகிய காலத்தில் சில சீர்திருத்த வெற்றிகளை மலர்வித்தாலும் அவை நீண்டகால நோக்கில் கருகிச்சாம்பலாகுவதும் தவிர்க்கமுடியாது. வேறு பெண்சார்ந்த அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து அவற்றுக்கு எதிர்நடவடிக்கைகள் மேற்கொள்ளல்வேண்டும். பொருளாதார பொறிமுறைகளை தகர்த்தெறியாமல் முழுமையான பெண்விடுதலை சாத்தியமில்லை.

www.tamilarangam.net

# பெண்நிலைவாதம் பற்றி.....

பெண்நிலைவாதம் என்றால் என்ன? பெண்நிலைவாதிகள் என்றால் யார்? இவர்கள் ஆண்களுக்கு எதிரானவர்களா? ஆண்களை எதிர்ப்பது தான் இவர்களது நோக்கமா? என்ற கேள்விகள் இன்று எம்மைச் சுற்றி எழுகின்றன.

இத்தகைய கோஷங்களும், விவாதங்களும் ஒரு மட்டத்தில் மட்டுமே நடந்து கொண்டிருக்க, பெண்களுக்கு என்ன தான் பிரச்சனை? இவர்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன தானே? இவர்கள் கேட்கும் உரிமைகள் தான் என்ன? என்ற கேள்விகளும் பல ஆண்களால் பெண்களை நோக்கி கேட்கப்படுகின்றன.

ஒவ்வொரு சமுதாயத்தையும் எடுத்துக்கொண்டால் பெண்களின் வாழ்நிலைகள் வித்தியாசப்படுகின்றன. அந்த சமூகங்கள் வளர்ச்சியடைந்ததை பொறுத்தே பெண்களின் ஒடுக்குமுறை தங்கியுள்ளது. ஆனால் உலகின் எந்தப் பாகத்திலும் பெண்கள் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள் என சொல்வதற்கில்லை.

காலகாலமாக சமூகங்களில் காணப்படும் ஒடுக்குமுறைகளுக்கேற்பவே பெண்கள் பிறந்த நாளிலிருந்து வளர்க்கப்படுவதால் அவர்கள் மனவளர்ச்சியும் அதற்கேற்பவே வளர்கின்றது. ஆகையால் உடனடியாக அனைத்து பெண்களும் தாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என உணர்ந்து தங்கள் உரிமைகளுக்கு குரல் கொடுக்க முன்வரமாட்டார்கள். அவர்கள் வாழும் வாழ்க்கைமுறை அவர்களுக்கு வித்தியாசமானதாகவோ அல்லது அதில் எதாவது ஒடுக்குமுறை இருப்பதாகவோ அவர்கள் எண்ணிப்பார்க்கவும் இல்லை. எண்ணிப்பார்க்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை.

தாய்வழி சமுதாயத்தில் குழுக்களாகவிருந்த போது பெண்களுக்கிருந்த தலைமைத்துவம், உற்பத்தியின் வளர்ச்சியால் ஏற்பட்ட வர்க்க சமுதாயத்தின் தோற்றத்துடன் ஆணிடம் கைமாறப்பட்டது.

அன்று தொடக்கம் உற்பத்தியில் ஈடுபடும் ஆணுக்கு சேவகம் செய்வதும், அவனுக்காக வாரிசை பெற்றெடுத்து வளப்பதுவுமே ஒரு பெண்ணின் வேலைகளாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இது படிப்படியாக அவளுக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு துண்டிக்கப்பட்டு வேலை பார்க்கும் ஆண்களை தொடர்ந்தும் பராமரிப்பதற்காகவும், இந்த அமைப்புமுறையை கட்டிக் காப்பதற்கும் ஆளும்வர்க்கத்திற்கு பெண்களை அடக்கி வைப்பதற்கான தேவையுள்ளது.

ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பெண்கள் ஒடுக்கப்படுவதற்கான காரணம் ஒன்றாகவேயுள்ளது.

எமது சமூகத்தில் வாழும் பெண்களை எடுத்துக் கொண்டால் அவளது ஒடுக்குமுறை மற்றைய சமூகங்களில் வாழும் பெண்களின் நிலையிலிருந்து வேறுபட்டதாயிருப்பினும் ஒடுக்குமுறை என்பது பொதுவானதாகவேயிருக்கின்றது. வெவ்வேறு வடிவங்களினூடாக

---

உமா

---

ஒடுக்குமுறைகள் வெளிப்படுகின்றன.

கல்வியில் பாரபட்சம், சம்பள சமமின்மை, சமுதாயத்தில் தனித்துவமான பிரஜையாக ஏற்றுக்கொள்ளாமை, பாலியற் பலாத்காரம், கலாசார ரீதியான ஒடுக்குமுறை, பொருளாதார ரீதியாக தங்கி வாழ்தல் போன்றவையே பெண்களின் பாரிய ஒடுக்குமுறைகளாகவுள்ளன. வர்க்கத்திற்கு வர்க்கம் பெண்களின் ஒடுக்குமுறைகள் வித்தியாசப்பட்டாலும், பெண் என்ற ரீதியில் அவள் ஒடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருப்பாள். வீட்டிலிருக்கும் பெண் ஒருவிதமான ஒடுக்குமுறைக்கும், வெளியில் சென்று வேலை செய்யும் பெண்கள் இன்னொரு விதமான ஒடுக்குமுறைக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்.

இவ்வடிவங்கள் பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டு வருவதால் இவற்றிலிருந்து விடுபடுவது சுலபமான விடயமல்ல. இத்தகைய ஒடுக்குமுறைகளையும், அவற்றிற்கான காரணங்களையும் இனங்கண்டு உணர்வுபூர்வமாக இவற்றிலிருந்து விடுபட மேற்கொள்ளும் அனைத்து எத்தனிப்புகளுமே பெண்நிலைவாதம் என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதத்தினுள் அடங்குகின்றன.

ஆணும், பெண்ணும் பால் ரீதியாகவே வித்தியாசப்படுகிறார்களன்றி பெண்களால் தனித்து எந்த போராட்டத்தையும் முன்னெடுக்க முடியாதென்ற வாதமும் எழுகின்றது. நாம் வாழும் சமூகத்தில் பெண்களின் ஆதிக்கம் நிலவும் போது வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பெண்கள் ஒடுக்கப்படுவதற்கு ஆண்களும் காரணமாக உள்ளனர். ஆகையால் சமவுரிமை கேட்டு எழும்போது ஆண்களுடன் மோதுவது போல் தென்படுகின்றது. ஆணுக்கு பெண் சமன் என்பதற்கு முதலில் ஆணுடன் தான் மோதவுள்ளது. ஏனென்றால் இந்த அமைப்புமுறையின் பாதிப்புக்கள் உளவியல் ரீதியாக இந்த சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரின் மனதிலும் விதைக்கப்பட்டுள்ளன.

இந்த சமூகஅமைப்பில் ஆண்களும் தான் ஒடுக்கப்படுகிறார்கள். அவ்வாறு இருக்குமிடத்து பெண் மட்டும் எப்படி தனித்து அவளது விடுதலையை பெறமுடியும்? என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது.

சமூகமாற்றத்திற்கான போராட்டங்களின் போது இருபாலரின் பங்களிப்பும் இன்றியமையாததாகவிருக்கின்றது. ஒடுக்கப்படுபவர்கள் என்ற ரீதியில் விடுதலையின் அவசியத்தை உணர்ந்து ஒன்றிணையும்போது நிச்சயம் பெண்களும் அடங்குவர்.

பெண்கள் தங்கள் உரிமைக்காக எந்தவித குரலும் கொடுக்காது, சமூகம் மாறியபின் விடுதலை கிடைக்கும் என எண்ணுவது தவறாகும். நாளாந்தம் உழைத்து வரும் தொழிலாளிக்கும் பெண் ஒடுக்குமுறையில் பங்கு உள்ளது ஆதலால் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களின் உரிமைகள் தான் என்ன? அதற்கான காரணங்கள் தான் என்ன? என உணர்த்தலே முதலில் அவசியமாகின்றது.

பெண்விடுதலைக்கான தீர்வு ஒருநாளில் சொல்லக்கூடிய விடயமோ, அல்லது ஒருநாள் போராட்டத்தால் பெறக்கூடியதோ அல்ல. ஒடுக்கப்படுபவர்கள் ஒடுக்குமுறையிலிருந்து விடுபட நடவடிக்கைகள் எடுக்கும் போது முழுமையான போராட்டத்திற்கு அடி எடுத்து வைப்பதாகவே அமைகின்றது.

(இக்கட்டுரை நான்காவது பெண்கள் சந்திப்பில் வாசிக்கப்பட்டது.)

( 5ம் பக்கத் தொடர்ச்சி )

அத்துடன் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் வகையில் பெண்கள் இணைந்து அமைப்புக்களை உருவாக்கினார்கள். இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகளை தட்டிக்கேட்க ஆளின்றிப் போன நிலைமையில் இவ்வமைப்புக்கள் வன்முறைக்கெதிராகக்குரல் கொடுத்ததுமட்டுமன்றி சமாதானத்தைக் கடைபிடிக்குமாறு வேண்டியும் ஊர்வலங்கள், கையெழுத்து வேட்டைகள் என்பவற்றை நடாத்தியுள்ளனர்.

போர் அல்லது புரட்சி என்பன சமூகத்தில்பெண்களின் நிலையை மாற்றியுள்ளதை வரலாறுகள் காட்டுகின்றன. அதாவது பெண் உற்பத்தியில் பங்கு வகிக்க வேண்டியவளாயும், குடும்பத்தில் தனக்குரிய பங்கை ஆற்றுபவளாயும், பல்வேறு பணிகளில் பங்குகொள்பவளாயும் உருவாகிறாள். போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணியில் பெண்களே பெரும்பாலும் ஈடுபட்டனர். ஆயினும் அதன் பின்னர் தொடர்ந்து வந்தகாலங்களில் அவர்கள் மீதான ஒடுக்குமுறைகள், சுதந்திரப்பறிப்பு என்பவை முற்றிலும் தகர்ந்து விடவில்லை. போர்சூழலினால் தம்மீதான கட்டமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்ட பெண்கள் தொடர்ந்தும் சமூகத்தில் தமது அடிப்படை உரிமைகளையும், வாழ்க்கை, அரசியற், கருத்துச் சுதந்திரங்களையும் பேணிக் கொள்ளும் வகையில் விழிப்புடன் செயற்படவேண்டும்.

---

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தைமனிதர் தலைகவிழ்ந்தார்

மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினிலெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டிவிட்டோமென்று கும்மியடி.

- பாரதி

www.tamilarangam.net

# தீயிடை மரங்கள்



விலக்கு எமக்குப் பனியும்
குளிரும்!
விறைத்த உளத்தில் எதுதான் தெரியும்?

ஒளிர்வதற் கதிக நாளிகையுண்டு
உருட்டும் எம்விழிக்கு இதுவும் வெளிச்சம்.

செம்புக்குருதி நெம்புகோலுடலம்,
இடுப்பிலும் தலையிலும் குடமென சுமைகள்.

ஒல்லியாகவும் உண்டி குறைத்தும்,
மெல்லிய இடுப்பில் மேனியே கனவும்,

வனப்பும், அணைப்பும், வகையிலா உழைப்பும்,
தினமும் காய்த்திடும் தீயிடை மரங்கள்,

காய்ப்பதனாலோ கல்லெறிகின்றீர்?
காய்ப்பதை நிறுத்தவா? கண்களைத் திருப்பவா?

முடிவுக்காக ஒன்று சேர்கின்றோம்!
இதுவே எங்கள் தொடக்கமுமாகலாம்!

விஜிதா

www.tamilarangam.net

# பழகிப் போனது

ஐந்திற்கும் அதற்கும்மேலும்,
வட்டிக்கு அடைவுவைத்து
நம்பிக்கைகளை,
நாற்று வைத்தோம்.
பனி, இரவு பாராமல்
பலநாள் கண்விழித்து,
பல பொழுதை
பயிர்களுக்காய்
பணயம் வைத்தோம்.

நாற்றுக்கள்–
நடுவரம்பை தாண்டி,
நாணயமாய் கதிர்வீசி,
தலைசரித்த வேளையது.

வயல்வரப்பை சுற்றிவந்து,
வட்டியுடன் முதல்கட்டி,
வளமான நாட்களுக்காய்,
வறுமையுடன்
காத்திருந்தோம்

பொலிதூற்றி,
பதர்ஒதுக்கி,
வைக்கோல்– போர்
தொடுக்கும் வேளையும்
வந்தது.
கூடவே வந்தது,
அவர்களது அதிநவீன
வாகனங்களும்,
கண நேரம்தான்
கந்தகப் புகை
காற்றோடு
கலந்த போது
மயான அமைதி
மரித்திட்ட
மக்கள், திட்டுத்
திட்டாய்,

கனவுகள் பலகண்டு
களிப்புடன் வளர்த்தபயிர்
கண்முன்னே,
இரும்புக் கால்களில்
சிதைப்பட்டு சிதறி
மண்ணும் மணியும்
மீண்டுமோர்
சந்திப்பு.

இப்படித்தான்
கழிகின்றது
இன்றைய நாட்கள்.
வட்டிக்கட்ட
வழியும் இல்லை
வைத்த எதுவும்-மீளவில்லை,
பட்டினியும்
சாவும்- மட்டும்
பரிச்சயமானதிங்கே.

-ரதி

